**<u>செய்தி வெளியீடு எண்.580</u>** **<u>நாள்.13.9.2007</u>**

## மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் வருவாய்த்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம்

## நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் திட்டம், மழைக்காலங்களில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை மற்றும் சுனாமி வாழ்வுப் பணிகள் குறித்த விரிவான ஆய்வு.

வருவாய்த்துறையின் சார்பில் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களில் குறிப்பாக நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் திட்டம், மழை வெள்ளக்காலங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் கடலோர மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 13 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுனாமி மறுவாழ்வு மற்றும் நிவாரணப் பணிகளின் நிலை குறித்தும் மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் வருவாய்த்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம் இன்று ( 13.9.2007) காலை 11.30 மணியளவில் கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்றது.

**<u>சுனாமி மறுவாழ்வுப்பணிகள்</u>**

கடலோர மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மறுவாழ்வுப் பணிகள் மற்றும் வீடுகளின் கட்டுமானப்பணிகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டபோது 8 ஆயிரத்து 406 வீடுகள் மட்டுமே கட்டிமுடிக்கப்பட்டிருந்தன. முதற்கட்டமாக கட்டப்பட்டுவரும் 59 ஆயிரத்து 332 வீடுகளில் 30 ஆயிரத்து 404 வீடுகள் பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 36 ஆயிரத்து 995 வீடுகளின் கட்டுமானப்பணிகள் 31.10.2007க்குள் முடிக்கப்படும். மேலும், கடலோர மாவட்டங்களில் இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்படும் என கண்டறியப்பட்டுள்ள 52 ஆயிரம் வீடுகளில் முதற்கட்டமாக 22000 வீடுகள் உலக வங்கியின் நிதி உதவியோடு ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் கட்டப்படவுள்ளது. சென்னையைப் பொருத்தமட்டில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்படவுள்ள 19 ஆயிரத்து 898 வீடுகளில், 5346 வீடுகள் கட்டப்பட்டுவிட்டன, திருவற்றியூர், ஒக்கியம் துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் கட்டப்படவுள்ள வீடுகளின் கட்டுமானப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. மேலும், மெரினா கடற்கரையில் உள்ள 7300 அடுக்குமாடி குடியிருப்புகளும் புதிய குடியிருப்புகளாக கட்டித்தரப்பட உள்ளன. இத்திட்டமும் உலக வங்கியின் நிதி உதவியோடு நிறைவேற்றப்படவுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் அடிப்படை வசதி மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேம்படுத்திட ஆசிய வளர்ச்சி வங்கியின் சார்பில் 320 கோடி ரூபாய் செலவில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழற்சி நிதி உள்ளிட்ட பல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கல்விக் கட்டணத்தைப் பொறுத்தமட்டில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் படிக்கும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் கல்விக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணச் சலுகைகள் 2006–07 ம் ஆண்டுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. நாளதுவரையில் 25 கோடியே 94 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு 2 இலட்சத்து 51 ஆயிரத்து 301 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் 300 ரூபாய் உதவித்தொகையானது 10ஆம் வகுப்பு வரையில் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக் கொண்டார்..

**“நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் திட்டம்”**

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அவர்களது பொருளாதார நிலையை உயர்த்திட வேண்டுமென்ற உன்னதமான நோக்கத்தோடு அரசின் கையிருப்பிலுள்ள நிலங்களை அரசின் செலவிலேயே பண்படுத்தி இலவசமாக வழங்கிடும் இத்திட்டம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை செயல்படுத்தப்படுகிறது. 17.9.2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் இதுவரையிலும் 4 கட்டங்களாக 91,576 விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 1,01,623 ஏக்கர் நிலம் இலவசமாக

வழங்கப்பட்டுள்ளது. ஐந்தாம் கட்டமாக 24,932 விவசாயக் குடும்பங்களுக்கு 32,065.61 ஏக்கர் நிலம் வழங்கிட தயார் நிலையில் உள்ளது.

மொத்தம் ஐந்து கட்டங்களிலும் சேர்த்து தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் 30,190 பேரும், பழங்குடியினர் 2,335 பேரும், பிற்படுத்தப்பட்டோர் 39,510 பேரும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 39,728 பேரும் இந்நிலங்களை இலவசமாகப் பெற்றுள்ளனர்.

**மூன்று லட்சம் வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம்**

2000–வது ஆண்டில் ஆட்சியில் இருந்தபோது இந்த அரசு, அரசுக்குத் தேவைப்படாத நீர்வழி புறம்போக்கு நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், மந்தைவெளி நிலங்கள், மயானம், பாட்டை என வகைபாடு செய்யப்பட்ட புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி பத்தாண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வருபவர்களுக்கு, அந்நிலங்கள் தற்போது அத்தகைய உபயோகத்தில் இல்லாமல் நத்தமாக இருக்குமேயானால், அத்தகைய குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கி முறைப்படுத்தலாம் என அரசாணை பிறப்பித்தது. தற்போது, 2006–ம் ஆண்டில் மீண்டும் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இடையில் நின்றுபோன வீட்டுமனைப்பட்டா வழங்கும் இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்திட ஆணையிட்டது. இது தவிர ஆட்சேபகரமற்ற அரசு புறம்போக்குகளில் வீட்டுமனைப்பட்டா வழங்கும் முறையான திட்டத்தையும் முனைப்பாக செயல்படுத்திட மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தும், இலவச வீட்டுமனைப் பெற குடும்பத்தின் ஆண்டு வருமானத்தை ஊரகப் பகுதிகளில் ரூ.30,000/– எனவும், நகர்ப்புற பகுதிகளில் ரூ.50,000/– என உயர்த்தியும் இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தி.மு.கழக அரசு அமையும்போதெல்லாம் வீடு இல்லாத ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குவதை முக்கிய கடமைகளில் ஒன்றாகக் கருதி நிறைவேற்றி வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, சமீபத்தில் முடிவுற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கூட்டத்தில், நடப்பு ஆண்டில் (31.3.2008 முடிய) தமிழ்நாட்டில் மூன்று லட்சம் ஏழைகளுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்புக்கு இணங்க மாவட்ட நிர்வாகம் முனைப்புடன் செயல்பட்டு 10.9.2007 வரையிலும், பத்தாண்டுகளுக்கு மேல் குடியிருந்து வரும் ஏழைகளுக்கு 82,024 வீட்டு மனைப்பட்டாக்களும், முறையான வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 48,944 வீட்டு மனைப் பட்டாக்களுமாக மொத்தம் 1,30,968 வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன. இதில், தாழ்த்தப்பட்டோர் 38,384 பேரும், பழங்குடியினர் 2,136 பேரும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 42,388 பேரும், பிற்படுத்தப்பட்டோர் 45,012 பேரும், மற்றவர்கள் 3,048 பேரும் பயனடைந்துள்ளனர்.

மேலும், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் மற்றும் விவசாயிகள் சமூக நலப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உறுப்பினர் சேர்ப்பது மற்றும் பயனாளிகளை கண்டறிந்து பயன்களை வழங்குவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறை செயலர் திரு அம்புஜ் சர்மா, சிறப்பு ஆணையர் மற்றும் நிலசீர்திருத்த ஆணையர் திருமதி. தங்கம் சங்கரநாராயணன், வளர்ச்சி ஆணையர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் திரு. எம்.எப்.பருக்கி, சிறப்பு பணி அலுவலர் (நிவாரணம் மற்றும் மறுவாழ்வு) திரு. சி.வி. சங்கர், நிர்வாக ஆணையர் திரு. ரமேஷ்ராம் மிஸ்ரா, சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஜெயா, தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. டி.கே. ராமசந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9